முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.63/2024

நாள்: 05.08.2026

பெயர்: சோமசுந்தரம் (வா.சா.1) த/பெ: அழகப்பன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1. சரோஜாவின் சொத்தை நானும் தமிழரசியும் 06.10.1997 ல் கிரயம் வாங்கினோம் என்றால் சரிதான். ஆளுக்கு தலா 14 செண்ட் கிரயம் வாங்கினோம். இருவரும் அவரவருக்கு உண்டான 14 செண்டை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தமிழரசி வாங்கிய கிரய சொத்தை பிரதிவாதி ராஜேஸ்வரிக்கு 27.06.2005 ல் கிரயம் கொடுத்தார் என்றால் கொடுத்தார்கள். 06.10.1997 ல் நான் சரோஜா என்பரிடம் கிரயம் வாங்கிய இடத்தை குவாகம் கிராமத்தில் இருக்கும் சிங்காரவேல் முதலியார் மகன் சேகர் என்பவரிடம் சர்வே எண் 362/1 சி ல் 7 செண்ட் இடத்தை 13.05.2005 ல் கிரயம் பேசி ரூ.21,700/- கிரயம் கொடுப்பதா ஒப்புக்கொண்டு அன்றைய தினமே ரூ.16,700/- பெற்றுக் கொண்டு மீதி தொகை ரூ.5000/- ஐ கொடுத்து கிரயம் வாங்குவதாக ஒப்புக் கொண்டதன் பேரில் ஒரு கிரய ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டதா என்றால் எழுதப்பட்டது. அது சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வு. அசல் வழக்கு எண் 144/2006 என்ற் வழக்கை சேகர் என்பவர் நான் ஒப்புக்கொண்ட கிரய ஒப்பந்த உடன்படிக்கை படி நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 1ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். ராஜேஸ்வரி அவ்வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். தமிழரசி அந்த வழக்கில் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் தமிழரசியும் ஆஜர் ஆகாத காரணத்தினால் எங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் ராஜேஸ்வரி மட்டும் வழக்கிறஞர் வைத்து கட்சி நடத்தினார் என்றால் சரிதான். சேகர் போட்ட அந்த வழக்கு தள்ளுபடி ஆகி விட்டது என்றால் சரிதான்.

அந்த தீர்ப்பின் மேல் மேல்முறையீட்டை சேகர் அரியலூர் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 146/2012 என தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 118/2015 ராஜேஸ்வரியின் மீதும் தமிழரசியின் மீதும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 16.10.2023 தேதியில் இந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் பேரில் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் நான் அரியலூரில் கோடைகால விடுமுறை நாட்களில் நீதிமன்றத்தில் ராஜேஸ்வரியின் மீது அசல் வழக்கு எண் 40/2024 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ராஜேஸ்வரி வாங்கிய இடத்தில் எனக்கு என்றுமே புழங்குரிமை பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய கிரய பத்திரத்தில் பாதை சம்மந்தமாக எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி ஒரு விதவை என்ற காரணத்தினால் அவர் மீது பொய்யாக பல வழக்குகள் தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சோமசுந்தரம்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்